**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 167 of 2024

Depositions of PW - 4 witness for ________ Prosecution / Defence / Court

Name : கனகராஜ்

Father's Name : பழனிசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of November** 2025.

**(1ம், 2ம் எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் சூலூர் தாலுகா ஜல்லிப்பட்டியில் குடியிருந்து கொண்டு ட்ரான்ஸ்போர்ட் வைத்து உள்ளேன். சம்பவத்தில் காயமடைந்த தீபிகா மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியவர்களை எனக்கு தெரியும். இரண்டாம் எதிரி சக்திவேல் அவர்களை எனக்கு தெரியும். இரண்டாம் எதிரி சக்திவேல் எங்கள் ஊரைச் சார்ந்தவர். மேலும் எனது உறவினர். நானும் ஈஸ்வரன் என்பவரும் கடந்த 31.05.2024 ஆம் தேதி மதியம் சுமார் 1.30 மணி அளவில் ஜல்லிபட்டி பேருந்து நிறுத்தம் அருகே நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது சத்தம் கேட்டது. பொதுமக்கள் அதிக அளவில் கூடினார்கள். நான் என்னவென்று பார்க்க தமிழ்செல்வி மற்றும் தீபிகா இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்று கார் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது.

2. பின்னர் விபத்து குறித்து தீபிகா மற்றும் தமிழ்ச்செல்வி அப்பாவிற்கு தகவல் சொன்னேன். அவர் அப்பா தான் வெளியே இருப்பதாக தெரிவித்தார். பின்னர் ஆம்புலன்ஸ் வரவழைத்து

இருவரையும் நான் சூலூர் கே எம் சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு சிகிச்சை அளித்த பொழுது தீபிகா அவர்களுக்கு அதிக அளவில் அடி இருப்பதாக தெரிவித்ததால் தீபிகா அவர்களை மட்டும் கோவை கங்கா மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு சேர்த்து இருப்பதாக கேள்விப்பட்டேன். விபத்து சம்பந்தமாக தீபிகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். காரின் ஓட்டுநரை நான் சம்பவத்தின் பொழுது பார்க்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

நான் போலீசார் என்னை விசாரித்த பொழுது கடந்த 31.05.2024-ம் தேதி மதியம் 01.50 மணிக்கு எங்கள் ஊரைச் சேர்ந்த ஈஸ்வரன் இருவரும் ஜல்லிபட்டி பேருந்து நிறுத்தும் அருகே நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது எங்கள் ஊரைச் சேர்ந்த சக்திவேல் என்பவரது மகள் தமிழ்ச்செல்வி மற்றும் அவரது அக்கா தீபிகா இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த பொழுது எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்காக அதிவேகமாக வந்த கார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது என்றும் அவ்வாறு மோதியதை நான் நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது சத்தம் கேட்டு பொதுமக்கள் கூடியதை அடுத்து நான் அங்கு சென்று மேற்படி இருவரும் தனக்கு தெரிந்தவர்கள் என தெரிந்து கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.19 18:53:30 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**
**சூலூர்**